RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1122

# பாரதி படைப்புகளில் தத்துவ நெறிகள்

## சு. செல்வக்குமார் [அ, *]

[அ] இலக்கியத்துறை, நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி-642001, தமிழ்நாடு, இந்தியா

# Philosophical Principles in Bharathi's Works

## S. Selvakumar [a, *]

[a] Department of Tamil Literature, Nallmuthu Gounder Mahalingam College, Pollachi–642001, Tamil Nadu, India

* Corresponding Author: vinnselvan@gmail.com

Received: 19-08-2021
Revised: 23-07-2022
Accepted: 30-07-2022
Published: 10-09-2022

Check for updates

**ABSTRACT**

In the last century, Mahakavi Bharathiyar set Tamil literature on a new path in terms of content and form. He is the one who brought simplicity, innovation, clarity, concentration, truth, and solidity into his writings and guided this philosophy to be useful. Philosophical thoughts such as patriotism, women's liberation, egalitarian society, social development, and Tamil sensibilities are notable. In his works, he has presented the principles of philosophical thought such as "I am Brahmam," self-realization, experience of Shiva, yoga, pure knowledge, establishment in oneness, surrender, clarity of will, and love for Shiva. This article explores Bharathiyar's creative intent, the importance he gives to them, and their uses.

**Keywords:** Mahakavi Bharathiyar, Brahman, Bharathi Works, Surrender, Will, Yoga, Illusion

## முன்னுரை

பாரதியின் படைப்புகள் பன்முகப் பாடுபொருளாக்கம் கொண்டவை. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பயன்பெற தன் எழுத்துக்களைக் கையாண்டவர். எளிய பதங்களில் உயர்ந்த சிந்தனைகளைப் புதிய வடிவங்களில் வெளிப்படுத்தியவர் பாரதி. அவர் எழுத்துக்களில் அவருடைய கற்றல் அறிவும் அனுபவ அறிவும் தன்னெழுச்சியும் மேலோங்கக் காணலாம். அவ்வகையில் இந்திய ஞானிகள், யோகிகள், மகான்கள் வழி உதித்த மெய்ப்பொருளை உணர்தல் குறித்த தத்துவநெறிகளில் ஈடுபாடும் நம்பிக்கையும் கொண்டவர் என்பதோடு மெய்ப்பொருள் அனுபவமும் கொண்டவர் என்பதை அவருடைய எழுத்துகள் வெளிப்படுத்துகின்றன. அத்தகைய நெறிகள் குறித்து பாரதி வெளிப்படுத்தும் கருத்துகள் குறித்தும் அவர் பெற்ற அனுபவம் குறித்தும் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## தத்துவம்- சொற்பொருள் விளக்கம்

தத்துவம் என்ற சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர் பித்தகோரஸ் ஆவார். இவர் தத்துவம் என்பது “அறிவின் மீது கொண்டிருக்கும் பற்றினைக் காட்டுகிறது” என்கிறார். பிளேட்டோ “தத்துவம்” என்பது உண்மையை உணரமுயலும் ஒன்று என்கிறார். தத்துவம் என்பது பிரபஞ்சத்தின் முழுமைப்பொருளை அறிய உதவும் ஒரு முறையாகும் எனச்சொல்லப்படுகிறது.

காண்ட் என்பவர் தத்துவம் என்பது உணர்தல் என்ற ஒரு விஞ்ஞானமாகவும், அதன் ஆய்வாகவும் விளங்குகிறது. என்கிறார். டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் உண்மையை உள்ளபடியே உணர உதவும் தருக்க அடிப்படையையே தத்துவம் என்கிறார். (தத்துவம்-நியாயவாதம்) தத்துவம் என்பது முழுமையான அறிவியற் சிந்தனையின் தொகுப்பேயாம். தத்துவம் மனிதனை உயர்நிலைக்கு அழைத்துச்சென்று உண்மைகள், மெய்மைகள் பற்றிய அறிவினைக் கொடுக்கின்றது. தத்துவம் உயிரை இயக்கும் சக்தியாகக் கருதப்படுகிறது.

## தத்துவம் குறித்து சோ.நா. கந்தசாமி கூறும் கருத்துகள்

தத்+துவம்= தத்துவம் என்றாகும். தத்-அது, துவம்- தன்மை. பிரபுத்தன்மை, சகோதரத்தன்மை, என்னும் பொருளில் பிரபுத்துவம், சகோதரத்துவம் என்னும் சொற்கள் வழங்குதல் காண்க. துவம் என்னும் விகுதி பண்புப்பொருள் பயத்தலின் தத்துவம் என்ற சொல் "அதன் தன்மை" எனப் பொருள்படும். அது என்ற சொல் சமயந்தோறும் வேறுவேறு பொருளைக்குறிக்கும். அது பொருள் தன்மைகளைக் குறிக்கும் ஆதலின் பொருள் தன்மையை ஆராய்ந்து மெய்ம்மையினை நிலைநாட்டும் அறிவுக்கலைக்குத் தத்துவம் என்ற குறியீடு வழங்கியது காண்க. இச்சொற்கு இணையாக மெய்ப்பொருள், சமயக்கணக்கு என்ற குறியீடுகள் தமிழிலக்கியங்களில் காணப்படுகின்றன. வள்ளுவப்பெருந்தகை, மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில்,

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்று தத்துவ ஞானம்தான் தலையாய அறிவு என்று புகட்டியிருத்தல் காணத்தக்கது. மெய்ப்பொருள் என்பது உள்பொருள் எனக் கொள்ளத்தகும் (Varadarajan, 2002). தத்துவம் என்பது மனிதனுக்கு நன்மையையும் மேன்மையையும் அளிக்கக்கூடியதும் மெய்ப்பொருள் அல்லது செம்பொருளை உணரவைக்கும் பாதை என்பதும் தெளிவாகிறது (Kandasamy, 2003).

## தத்துவ நெறிகள்

இந்திய மரபில் மெய்ப்பொருளைத் தேடும் முயற்சி பன்னெடுங்காலமாக நிகழ்ந்து வேதாந்தம், அத்வைதம், துவைதம், விஷிஸ்டாத்வைதம், சாங்கியம், யோகம், மீமாம்சை, சித்தாந்த சைவம் என நீள்கிறது மெய்ப்பொருள் தேடலில் இறங்கிய தத்துவங்களின் பட்டியல். "தத்துவமஸி"- (பிரம்மமாக நீ இருக்கிறாய்) நீயே அது!, "அகம் பிம்மாஸ்மி" -நான் பிரம்மமாக இருக்கிறேன். உன்னை நீ அறிவாய்!" தன்னையறியத் தனக்கொரு கேடில்லை தன்னையறியத் தான் இருந்தனனே போன்றவை மகா மந்திரங்களாகச் சொல்லப்பட்டு வருகின்றன. தன்னில் தன்னை அறிதல் குறித்து தமிழகத்தில் தோன்றிய நாவுக்கரசர், தாயுமானவர். வள்ளலார், பகவான் ரமணர் போன்ற ஞானிகள் எடுத்துரைத்துள்ளனர். இத்தகைய மரபுசார்ந்த தத்துவ நெறிகள் குறித்த சிந்தனைகளில் பாரதி அறிவும் நம்பிக்கையும் அனுபவமும் கொண்டவர் என்பதற்கு அவரின் படைப்புகள் சான்றாக அமைவதைப் பின்வரும் பகுதி விளக்குகிறது.

## நானே பிரம்மம் என்றுணர்தல்

பிரம்மத்திலிருந்தே அனைத்தும் தோன்றுகின்றன. யாவும் அதனுள் ஒடுங்குகின்றன. எனவே, அதனையுணர்தலும் அதில் நிலைபெறலும் மனிதன் தன் வாழ்வில் அடையக்கூடிய உயர்ந்த நிலையும் இறுதிநிலையும் நிறைநிலையும் ஆகும் (Charles, 2021).

"ஆயிரங் கோடி அறிஞர்கள் பற்பல

ஆயிர யுகங்க ளாராய்ந் தறிகிலா

யான்உடையியற்கை யானோ அறிவன்?

யானதை யொரோவழிக் கண்டுள்ளேன்

பிரமமே யானெனப் பேசுவர் பேசுக!

பிரமமே யானெனப் பேசினர் பெரியோர்!"

என்று பாரதி பிரமம் குறித்துப் பேசுவதையும் அவர் அதை உணர்ந்து கூறுவதையும் காணமுடிகிறது (Sundara murthi, 2004).

## மாயையை உணர்தல்

காணும்பொருள் யாவும் உண்மையில்லை என்பதை உணர்ந்து அதன் உண்மைத் தன்மையை உணர்ந்து தெளிதல் வேண்டும் என்பது ஞானிகள் வாக்கு. வள்ளுவரும் இது குறித்துச் சிந்தித்துள்ளார் என்பதற்கு,

"பொருள்அல்ல வற்றைப் பொருள்என்று உணரும்

மருளான்ஆம் மாணாப் பிறப்பு"

என்ற குறட்பா சான்றாகிறது (Varadarajan, 2002). பகவான் ரமணர், "பார்ப்பவனும் பார்க்கப்படும் பொருளும் கயிறும் பாம்பும் போல. பார்த்தது பாம்பு என்ற பொய்யுணர்வு மறைந்தால்தான் கயிறு என்ற ஞானம் வரும். அதைப்போல உலகம் என்ற மாயை மறைந்தால்தான் மெய்ப்பொருள் புலனாகும். இந்த எலகம் என்பது உண்மையல்ல. வெறும் தோற்ற மயக்கமே. கனவில் காணுகிற காட்சி எப்படி உண்மையில்லையோ அப்படித்தான் இந்த உலகமும்" என்று கூறுவதும் இங்கு நோக்கத்தக்கது. பாரதி மாயையிலிருந்து விடுபட்டு நிற்பதற்குப் பல வழிகளை "மாயையைப் பழித்தல் "என்ற தனது பாடலில் கூறுகிறார் (Rajamanickam, 2008).

"உண்மை யறிந்தவர் உன்னைக் கணிப்பாரோ?

மாயையே-மனத்

திண்மை யுள்ளோரை நீ செய்வது

மொன்றுண்டோ! -மாயையே

சித்தத் தெளிவெனுந் தீயின்முன்

நிற்பாயோ? - மாயையே"

என வரும் பாடலில் உண்மையறிந்தால், திண்மையுள்ளம் கொண்டிருந்தால், தேகம் பொய்யென்று உணர்ந்தால், ஒருமையுணர்வு கைவரப்பெற்றால், உலகப்பொருள்கள்தரும் இன்பங்களை ஏற்காது மறுத்தால், அற்ப இன்பங்களை நாடாதிருந்தால், யாருக்கும் அடிமையற்று இருந்தால் மாயையால் வரும் துன்பங்கள் இல்லை என்ற பாரதியின் கருத்து வெளிப்படுவதைக் காணலாம் (Sundara murthi, 2004).

## அறிவே தெய்வம் என உணர்தல்

"அன்பே சிவம்" என்று சித்தர்கள் கூறுவது போல "அறிவே தெய்வம்" என்று பாரதி கூறுகின்றார்.

"இருவேறு உலகத்து இயற்கை திருவேறு

தெள்ளியர் ஆதல் வேறு"

வள்ளுவர் இக்குறட்பாவில் தெளிந்த அறிவுடையவாக இருத்தலுக்குக் கூட ஊழ்தான் காரணம் என்று குறிப்பிடுகிறார் (Varadarajan, 2002). பாரதியார் கீழ்வருமு் பாடலடிகளில் சுத்த அறிவே அதாவது தெளிந்த அறிவே தெய்வம் என்று கூறுகின்றமை நோக்கத்தக்கது.

"ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி

அலையும் அறிவிலிகாள்! -பல்

லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்

டாமெனல் கேளீரே?

எதனூடும் நின்றோங்கும் அறிவொன்றே தெய்வமென்

றோதி யறியீரோ?

சுத்த அறிவே சிவமென்று கூறுஞ்

சுருதிகள் கேளீரோ?" (Sundara murthi, 2004)

## சிவத்தை உணர்தல்

எங்கும் நிறைந்துள்ள இறைவனை அவரவர் புரிதலுக்கேற்ப அழைத்தலுண்டு. பாரதியோ அந்தச் சக்தியைப் பரசிவ வெள்ளம் என்றழைத்துப் பாடுகிறார்.

"காணுவன நெஞ்சிற் கருதுவன உட்கருத்தைப்

பேணுவன யாவும் பிறப்பதந்த வெள்ளத்தே.

தன்மையொன் றிலாதுவாய்த் தானே ஒரு பொருளாய்த்

தன்மைபல வுடைத்தாய்த் தான்பலவாய் நிற்பதுவே

எங்கும் நிறைந்திருந்த ஈசவெள்ள மென்னகத்தே

பொங்குகின்ற தென்றெண்ணிப் போற்றிநின்றாற் போதுமடா!

யாதுமாம் ஈசவெள்ளம் என்னுள் நிரம்பியதென்

றோதுவதே போதுமதை உள்ளுவதே போதுமடா?"

இவ்விடம் "நோக்கரிய நோக்கே! நுணுக்கரிய நுண்ணுணர்வே காண்பரிய பேரொளியே ஆற்றின்ப வெள்ளமே! அத்தா மிக்காய் நின்றதோற்றச் சுடரொளியாய், சொல்லாத நுண்ணுர்வாய், மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறேவற்றறிவாம் தேற்றனே! தேற்றத்தெளிவே" என்று மாணிக்கவாசகர் இறைவனைப் பாடுவதும் இங்கு நோக்கத்தக்கது (Sundara murthi, 2004).

## "நான்" ஐ உணர்தல்

"நான் யார்?" என்ற ஆன்ம ஆராய்ச்சி மூலம் மாயை நீங்கிய மெய்ப்பொருளைக் காணமுடியும் என்பது ரமணரின் அசைக்க முடியாத நம்பிக்கை. ஆதிசங்கரர் உள்ளிட்ட பிற ஞானியரும் கூறியுள்ள உண்மை. "உடலுள்ளே தன்னுணர்ந்தார்க் கெல்லையறத் தானொளிரு நானிதுவே" (Ramanar, 2013) "நான் இந்த உடம்புதான் என்ற தவறான எண்ணம் நீங்கினால் எல்லாக்கஷ்டங்களும் பறந்தோடிவிடும்" என்கிறார் ரமணர் (Pranadharthi Haran, 2008).

பாரதியாரின் நான் என்ற தலைப்பில் பின்வருமாறு அமைந்த,

"வானில் பறக்கின்ற புள்ளெல்லாம்நான்

மண்ணில் திரியும் விலங்கெல்லாம் நான்

கானில் வளரும் மரமெல்லாம் நான்

காற்றும் புனலும் கடலுமே நான்

நானெனுன்னும் மெய்யை நடத்துவோன் நான்

ஞானச் சுடர்வானில் செல்லுவோன் நான்

ஆனபொருள்கள் அனைத்திலும் ஒன்றாய்

அறிவாய் விளங்குமுதற் சோதி நான்"

என்ற கவிதையடிகள் வாயிலாக நான் என்ற தன்மையை உணர்ந்தவர்கள் அனைத்தும் தானாகி விளங்குவர் என்பதைத் தன்னுணர்விலிருந்து வெளிப்படுத்துவதைக் காணமுடிகிறது (Sundara murthi, 2004).

## அன்பே சிவம் என்றுணர்தல்

"அன்பே சிவம்" என்கிறார் திருமூலர். "அன்பின் வழியது உயிர்நிலை" என்கிறது வள்ளுவம். அன்பின் தன்மையைப் பாரதி பல இடங்களில் பேசியுள்ளார். பக்தி என்னும் தலைப்பிலமைந்த கட்டுரையில் அன்பின் தன்மையைச் சிறப்பாக எடுத்துக்காட்டி அது இறைவனை அடைய எவ்வாறு துணை செய்கிறது என்பதையும் விளக்கியுள்ளார். ஈசுவரன் ஸ்வதந்திரனாயிருக்கிறான் அவனை எந்தச் சட்டமும் பந்திக்க வல்லதல்ல. எனினும், "எந்தன் அடியார்க்கு நான் அடியன்" என்று அவனே சொல்லியிருக்கிறான்." ஈசுவரன் அன்புருவானவன். அன்பே ஈசுவரன்" என்று உத்கோஷித்துள்ளார். ஆனால் இதை அனுபவ பூர்வமாகக் காண்பது அதிக கஷ்டமானது (Tamilpriyan, 2011). எவன் களங்கமற்ற பரிசுத்தமான ஹ்ருதயம் பெற்றிருக்கும் பாக்கியவானோ அவனே இவ்வுண்மையைக் கண்டானந்திக்க ஏற்றவன். தனக்கென்ற இச்சை ஒரு தளியேனும் நமது மனத்திலேயிருக்கும் வரை நமக்கு இந்நிலை ஸித்திக்கப்போவதில்லை. அது பரிசுத்த நிலை. அது தெய்வீக நிலை. இத்தகைய அன்பு ஒருவனுக்கு உதயமாகும் பொழுதே அவன் லௌகிகப் பந்தங்களினின்று விடுபட்டவனாகிறான் அன்பே நமதுயிர். அதுவே இந்த லோகத்தில் சாசுவதமானது. கள்ளம் கபடமற்ற மெய்யடியாருக்கு இது சிறிதும் கஷ்டமானதல்ல. ஏனெனில் அவன் அன்புடையவன். கருணா சாகரமாகிய ஈசுவரனிடத்து அவன் இயற்கையிலேயே கரைந்து செல்கிறான் (Jayakanthan, Sirpi Balasubramaniam, 2015).

"என்னிடத்தென்றும் மாறுதலில்லா

அன்பு கொண்டிருப்பாய்!"

"துன்ப நினைவுகளும் சோர்வும் பயமுமெல்லாம்

அன்பில் அழியுமடி"-கிளியே அன்புக்கழிவில்லைகாண்"

"உயிர்களிடத்து அன்பு வேணும்"

"அன்பினைக் கைக்கொள்ளடா இதை அவனிக்கிங்கு ஓதிடடா"

இவ்வாறு அன்பினால் துன்பங்கள் அழியுமென்பதையும் இறைவனை உணர அதுவே வழியென்பதையும் இவ்வடிகள் வாயிலாகப் பாரதி உணர்த்தி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது (Sundara murthi, 2004).

## இன்ன பிறவும்

மனங்கடந்த நிலை, விடுதலை, சரணாகதி, மரணமில்லாப் பெருவாழ்வுணர்வு குறித்த பாரதியின் தத்துவத் தேடல்கள் அவருடைய கவிதை. கட்டுரை படைப்புகளில் வெளிப்பட்டுள்ளன. "பாரதி அறுபத்தாறு" பகுதியில் தன் வாழ்வில் சந்திக்க நேர்ந்த குருமார்கள், அவர்கள் பாரதிக்கு உணர்த்திய மெய்ப்பொருள் உணர்வு நிலைகள் குறித்த பதிவுகள் பாரதியின் ஞான அனுபவத்திற்குச்சான்றாவன.

## முடிவுரை

தத்துவம் என்ற சொல் அவரவர் அனுபவத்திற்கேற்ப எதை மெய்ப்பொருள் எனக் கருதுகிறார்களோ அதுவே அவர்களுக்கான உண்மையாக உள்ளது. தமக்குள் இருக்கும் "நான்" ஐ உணர்தலே ஞானம் என்பதை ஞானிகள் உணர்த்தியுள்ளனர். இக்கருத்தில் பாரதி நம்பிக்கை கொண்டவராக உள்ளதை அவரின் கவிதைகள் வெளிப்படுத்துகின்றன. இறைவனை உணரவும் உலகத் துன்பங்களை வெல்லவும் அன்பின்

வழியே உயர்ந்தது என்பதை பாரதி தன் எழுத்துக்களில் வெளிப்படுத்தியுள்ளார். பாரதியின் அனுபவத்தில் இறைசக்தி என்பது எங்கும் நிறைந்ததாக, எதற்கும் மூலமான பரசிவவெள்ளமாக உள்ளது. குருமார்கள் பலரிடம் கொண்ட தொடர்பும் அவர்களால் அவருக்குக் கிட்டிய மரணமில்லாப்பெருவாழ்வு, ஞானநிலை போன்ற உணர்வுகளும் அவரடைய படைப்புகளில் தத்துவநெறிகள் மிளிர்வதற்குக் காரணம் எனலாம். தத்துவம் குறித்த பாரதியின் படைப்புகள் ஞானத்தேடல் கொண்டவர்களுக்கு நம்பிக்கையையும் எளிய வழிகளையும் காட்டுவனவாக அமைகின்றன.

## References


Charles, L., (2021) The Theological Principles of Mahakavi Bharati, International Research Journal of Tamil, 3(S-2), 18-23. https://doi.org/10.34256/irjt21s24

Jayakanthan, Sirpi Balasubramaniam, (2015) Bharathiar Ktturaikal, Sahitya Akademi, New Delhi, India.

Kandasamy, S.N., (2003) India Thathuva Kalanjiyam, Meiyappan Pathippagam, Chidambaram, India.

Pranadharthi Haran, T.N., (2008) Bhagavan Ramanar 100 Kelvikal Pathikal, Ramana Maharshi Centre for Learning, Bangalore, India.

Rajamanickam, S., (2008) Bhagavan Ramanar, Santhiya Pathippagam, Chennai, India.

Ramanar, (2013) Ulladhu Narpadhu, Sri Ramanasramam, Tiruvannamalai, India.

Sundara murthi, (2004) Bharathiyar Padagal, Paavai Pathippagam, Chennai, India.

Tamilpriyan, R., (2011) Pathinettu Sidharkalin Mukkiya Padagalum Villangalum, Narmatha Pathippagam, Chennai, India.

Varadarajan, M., (2002) Thirukkural, The South India Saiva Siddhanta Publishing Society, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License